www.padippakam.com



# மகாபராக்கிரமபாகு முதல் கலிங்க மகான் வரை

16


## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ந வரலாந்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

இலங்கை மும் முடிச் சோழ மண்டலத்தின் ஒரு பகுதியாக இருந்தவரை அனுராதபுர அரசைப் போல சிங்கை நகர் அரசும் தலையெடுக்க முடியவில்லை. அவர்கள் சோழப் பேரசுக்கு திறை செலுத்திக் கொண்டு சிற்றரசர்களாக இருந்த அதே நேரம் அனுராதபுர அரசர்களுடன் கூட்டுச் சேர்ந்து சோழராட்சியை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியிலும் இறங்கியிருந்தனர்.

முதலாம் குலத்துங்க சோழன் காலத்தில் தாய் வழியில் சிங்கைநகர் தொடர்புடையவனான விஜயபாகு பொலநறுவையில் சோழராட்சியை முறியடிக்கும்



வரை சிங்கைநகரை அரசாண்ட மானாபரணன், கீர்திசிறீமேகன், சிறீவல்லபமதனராஜன் ஆகிய மூவரும் சோழரால் கொல்லப்பட்டனர்.

விஜயபாகு பொலநறுவையில் பட்டத்துக்கு வந்தபோது அவனது சகோதரி மகனான இரண்டாம் மானாபரணன் சிங்கை நகரில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். அத்தோடு விஜயபாகுவின் மகள் இரத்தினவல்லியையும் மணம் முடித்தான் விஜயபாகுக்குப் பின் விக்கிரமவாகு என்பவன் ஆட்சிக்கு வந்தபோது சோழநாட்டிலிருந்து குலோத்துங்கனின் தளபதியான கருணாகரத் தொண்டைமான் படையெடுத்து வந்து சிங்கை நகரையும் பொலநறுவையும் கைப்பற்றியதாக அவனது சாசனங்களில் இருந்து அறியப்படுகின்றது. இந்தப் போர் கி.பி. ஆயிரத்து நூற்றுப் பத்தாம் ஆண்டளவில் நடந்திருக்கலாம் என முதலியார் இராஜநாயகம் அபிப்பிராயப்படுகிறார்.

கருணாகரத் தொண்டைமான் சிங்கை நகரைக் கைப்பற்றியபின் கரணவாய் வெள்ளைப் பரவை பகுதிகளில் விளைந்த உப்பை தமிழகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக தொண்டமானாற்றை வெட்டியதோடு உரும்பிராயில் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான்.

கருணாகரன் சிங்கை நகர் ஆட்சியைக் கைப்பற்றிய போது சிங்கைநகர் அரசனான இரண்டாம் மானாபரணனை கொன்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அவனது மகனான பராக்கிரமபாகு பனங்காமம் எனுமிடத்தில் தன்னோடொத்த இளவயதினரான வாலிபர்களைக் கூட்டி அவர்களுக்கு யுத்தக் கலை பயிற்றுவித்து அந்த ஊரைக் கைப்பற்றி அங்கிருந்து அரசாண்டதாகம் பின்னர் அவன் தனது ஆட்சி எல்லைகளை சிறுது சிறிதாக விஸ்தரித்து சிங்கை நகரையும் கைப்பற்றி அங்கிருந்து குடத்தனை, நெல்லியான், மருதங்கேணி, வண்ணாங்குளம், சங்கத்தார் வயல், வழியாக பெரும் படையொன்றைத் திரட்டிக் கொண்டு பொலநறுவைக்குச் சென்று அங்கே அரசாண்ட இரண்டாம் கயபாகுவை வெற்றி கொண்டு இலங்கை முழுவதற்கும் அரசனானான் என்றும் முதலியார் இராஜநாயகம் கூறியிருக்கிறாரர்.

மகாபராக்கிரமபாகு என்றும் மாபெரும் சிங்கள மன்னன் என்றும் மகாவம்சப் பரம்பரையினர் போற்றிப் புகழும் இவன் ஒரு சிங்கை நகர் தொடர்புடைய தமிழ் மன்னன் என்பதையும் இவன் தனது முடிசூடலுக்கு முன் இந்துமுறைப்படி உபநயனச் சடங்கை செய்து கொண்டான் என்பதையும் தற்போதைய சிங்கள வரலாற்றாசிரியர்கள் சிலர் ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

மகாபராக்கிரமபாகு பராக்கிரம சமுத்திரம் உட்பட இலங்கை முழுவதும் பல்வேறு குளங்களையும் ஏரிகளையும் கால்வாய்களையும் கட்டி விவசாயத்தில்தன்னிறைவு அடையச் செய்ததோடு மலேயாவுக்கும் கம்பூச்சியாவுக்கும் படையெடுத்து அந்நாடுகளை வெற்றி கொண்டதாக சூளவம்சம் கூறுகிறது. அதே போல் பாண்டிய நாட்டிலே பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன் என்கின்ற இரண்டு பாண்டிய இளவரசர்களுக்கிடையில் வாரிசுப் போட்டி நடந்தபோது பராக்கிரமபாகு குலசேகர பாண்டியனுக்கு உதவியாக படையொன்றை அனுப்பி அவன் வெற்றி பெற உதவியதாக சொல்லப்படுகிறது. இந்தப் படைக்கு தலைமை தாங்கியவன் இலங்காபுரித் தண்டநாதன் என குலசேகர பாண்டியனின் சாசனத்தில் இருந்து அறியமுடிகின்றது. பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் சிங்கை நகர் ஒரு தனிஅரசாக இருக்கவில்லை. மாறாக பொலநறுவை ஆட்சியின் ஒரு அங்கமாகவே அது இருந்தது.

கி.பி.1154 இல் இலங்கையில் கொடிய பஞ்சமுண்டாக சோழ நாட்டில் இரண்டாம் இராஜ இராஜ சோழன் சபையில் இராமாயணம் பாடி அரங்கேற்றிய கவிச்சக்கரவர்த்தி கம்பரை ஆதரித்துப் புகழ் பெற்ற சடையப்ப வள்ளல் ஆயிரம் கப்பல்களில் நெல் அனுப்பி பஞ்சத்தைத் தீர்க்க உதவியதாகவும், அதற்கு நன்றி தெரிவித்து சிங்கை நகர் அரசன் கவி ஒன்றை பாடி அவருக்கு அனுப்பியதாக சோழ மண்டல சதகம் எனும் நூலில் இருந்து அறிய முடிகின்றது.

பராக்கிரமபாகு சகாப்தம் முடிந்ததும் சிங்கை நகர் மீண்டும் தனி அரசாக உருப்பெற்றது. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் கி.பி.1118 - 1146 அவரது அரண்மனைப் புலவராய் இருந்த புகழேந்திப்புலவர் கதிர்காம யாத்திரையின் பொருட்டு இலங்கை வந்த போது சிங்கை நகர் அரசனைக் கண்டு அவனைப் பாடி யானையும், நிதியும், பரிசாகப் பெற்றுச் சென்றார்.

**"பாவலன் வாசலில் வந்திபம்**
**வாங்கப் படிபுரக்குங்**
**காவலர் நிற்கும் படிவைத்தவா**
**கண்டியொன்பதிலும்**
**மேவலர் மார்பினுந்**
**திண்டோளினுஞ் செம் பொன்**
**மேருவினுஞ்**
**சேவெழுதும் பெருமான்**
**சிங்கையாரிய சேகரனே"**

என தனக்கு பரிசில் தந்த மன்னனைப் புகழ்ந்து பாடிய புகழேந்தியார் அவன் இறந்ததைக் கேள்விப்பட்டு

**"ஆஆ விதியோ வடலாரியர்**
**கோமான்**
**ஏ,ஏ வலரா வீறந்த நாள்**
**ஓ,ஓ தருக்கண் ணிலும் குளிர்ந்த**
**தண்ணளிதந் தாண்ட**
**திருக்கண்ணினுஞ் சுடுமோ தீ"**

என்றும் பாடியுள்ளதிலிருந்து அறிய முடிகின்றது.

முதலாம் பராக்கிரமபாகுவுக்கு முன் பொலநறுவையில் அரசுரிமை பற்றிய குழப்பங்கள் இருந்ததால் அங்கு நிலையான ஆட்சி இருக்கவில்லை. பராக்கிரமபாகுவின் தளபதிகள் பலர் மாறிமாறி ஆட்சிக்கு வந்த பின் பாண்டிய பரம்பரையில் வந்த பராக்கிரம பாண்டியன் என்பவன் அரசு கட்டில் ஏறினான். இவனது காலத்தில் (கி.பி. 1215) கலிங்க நாட்டிலிருந்து படையெடுத்து வந்த மகான் என்பவன் ஜெயபாகு என்பவனோடு சேர்ந்து சிங்க நகர் முழுவதையும் கைப்பற்றி அதன் பின் கொட்டியாரம், கந்தளாய், காக்காய் பள்ளி, பதவியா, மாதோட்டம், மன்னார், வலிகாமம், ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் எல்லாம் கோட்டைகள் அமைத்து தன்னைப் பலப்படுத்திக்கொண்டு பொலநறுவை மீது படையெடுத்து பராக்கிரம பாண்டியனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி, அங்கிருந்த புத்த விகாரைகளை எல்லாம் அழித்து நாசம் செய்ததாக மகாவம்சம் கூறுகிறது.



பராக்கிரமபாகு

சிங்கை நகர் அரசர்களில் முதலாவதாக சர்க்கரவர்த்திப் பட்டமும் கீர்த்திப் பிரதாபமும் பெற்றவனாக மகான் இருந்ததால் அவன் தனது பெயரை விஜயகாலிங்கச் சர்க்கரவர்த்தி எனச் சூடிக்கொண்டதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகின்றார்.

காலிங்கச் சர்க்கரவர்த்தி என்ற இவனது பெயரையே பின்னால் வந்த மைல்வாகனப் புலவர் கூழ்ங்கைச் சர்க்கரவர்த்தி என மாற்றிவிட்டார் என்பது அவரது வாதம். மகாவம்சமும் முதலியார் இராஜநாயகமும் கலிங்க மகானை, கலிங்கத்தில் இருந்து வந்தவன் என்று கூறுகின்றனர். ஆனால் இந்த கலிங்க மகான் தமிழகத்தில் இருந்த வந்திருக்கக்கூடும் என்றும் பாண்டிய மரபைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடும் என்றும் ஒரு கருத்து உண்டு.

குடாநாட்டைப் பற்றிய குறிப்பாக குடாநாட்டு அரசர்களைப் பற்றிய வரலாற்றில் இக் கலிங்க மகான் என்கிற கூழங்கைச் சர்க்கரவர்த்தியே முதலாவது அரசனாகக் கணிக்கப்படுகிறான்.

இவன் பொலநறுவையில் அரசாளும் காலத்தில் பரராசசேகரன் எனும் பெயருடைய ஒருவன் கி.பி. 1224-ல் தமிழ்நாட்டில் பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி செய்தபோது அவனுக்கு எதிராக சோழ அரசனுக்கு ஆதரவாக போரிடச் சென்று தலை பிடுங்கப்பட்டான் என மாறவர்மனின் திருக்கோளூர் சாசனம் கூறுகிறது.

இலங்கை முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆண்ட விஜய காலிங்கச் சர்க்கரவர்த்தியின் காலம் தொடக்கமே சிங்கை நகர அரசர்கள் ஆரியச் சர்க்கரவர்த்திகள் என பட்டம் பூண்டார்கள் என்றும் கி.பி. 1240-ல் அவன் இறந்தபோது அவன் மகன் குலசேகர சிங்கைஆரியச் சர்க்கரவர்த்தி பரராஜசேகரன் எனும் பட்டத்துடன் அரசன் ஆனான் எனவும் முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார்.

- நக்கீரன்

படிப்பகம்